**DEPOSITION OF WITNESS**
**(Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , ARANTHANGI**

| | | |
|---|---|---|
| **Calender** | | **STC.No.522/2018** |
| **Miscellaneous** | | |
| **Preliminary Register** | | |
| **Sessions** | | |
| **Deposition of witnesses for** | அ.சா. 7 | |
| **Name:** | திரு.குணசேகரன், காவல் ஆய்வாளர் | **Caste** |
| **Father's Name** | கருப்பணமுதலியார் | **Calling** |
| **Village** | | **Religion** |
| **Taluk** | | **Age 44 /22** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act II of 1993 of the day of -08-08-2022**

**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை**

**நான் தற்போது மணமேல்குடி காவல் நிலைய ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.. கடந்த 11-12-2016 ஆம் தேதி அன்று அறந்தாங்கி காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் சேகர் என்பவர் நிலையப் பொருப்பில் இருக்கும் போது அறந்தாங்கி அரசு மருத்துவமனையிலிருந்து வரப்பெற்ற தகவலின் அடிப்படையில் அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த ராஜாக்கண்ணு என்பவரிடம் வாக்குமூலம் பெற்று வந்தேன். மனு ரசீது எண். 672/2016 இன்படி பதிவு செய்து உதவி ஆய்வாளர் வேலுச்சாமி அவர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டு 18-12-2016 ஆம் தேதி 12,30 மணிக்கு புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் அறந்தாங்கி காவல் நிலையக் குற் எண். 498/2016 இ.த.ச.பிரிவுகள் 294(பி), 323, ஆகிய பிரிவுகளின்கீழ் முதல் தகவல் அறிக்கையானது பதிவு செய்யப்பட்டது. மேறப்டி முதல் தகவல் அறிக்கையானது அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி இவ்வழக்கில் சம்பவ இடம் சாட்சிகள்உத்தமநாதன், பழனிமுருகன், ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடமானது தயார் செய்யப்பட்டது. மேற்படி மாதிரி வரைபடமானது அ.சா.ஆ 3, மற்றும் அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் ராஜாக்கண்ணு, அருவகம், மகாலெட்சுமி, பழனிவேல், திருப்பதி, கண்ணன், உத்தமநாதன், பழனிமுருகன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் எதிரிகளை 11-1-2017 ஆம் தேதி 13,00 மணிக்கு ஆயிங்குடி பஸ் நிறுத்தம்**

முன்பு பெண் காவலர் உதவியுடன் கைது செய்து நிலையம் வந்து உரிய நடைமுறைகளைப் பின்பற்றி நிலையப் பிணையில் விடுவித்துள்ளார். முதல் விசாரணை முடித்து வழக்கு கோப்புகளை எனது பார்வைக்கு உதவி ஆய்வாளர் வேலுச்சாமி எனது பார்வைக்கு வைத்தார். இவ்வழக்கினை 15-2-2018 ஆம் தேதி எனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரணை செய்து சாட்சிகள் ஏற்கனவே கூறிய வாக்குமூலத்தை கூறியதால் மேலும் மறு வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை. பின்னர் சாட்சி அரசு மருத்துவர் அனித்தா அவர்களிடம் காயச்சான்று பெற்று விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று அ.சா.ஆ. 5 மற்றும் அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கின் குற்ற தன்மைக்கேற்ப இ.த.ச பிரிவுகள் 294(பி), 323, கீழ் 15-2-2018 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

குறுக்கு விசாரணை

அதே சம்பவ நாளன்று குற்ற எண். 497/2016 குற்ற எண்ணானது புகார்தாரர் மீது எதிரி தரப்பில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். புகார்தாரர் அளித்த புகார் மீது எதிரி கொடுத்த புகாருக்குப் பிறகே முதல் தகவல் அறிக்கையானது பதிவு செய்தேன் என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்பே புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் பேச்சு வார்த்தை இல்லையென்றால் சரிதான். இரண்டு வழக்குகளிலுமே புலன் விசாரணை அதிகாரி நான் தான் என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 1 முதல் 4 நபர்கள் புகார்தாரரின் உறவினர்கள் என்றால் சரிதான். இடப்பிரச்சினை சம்மந்தமாக இருவருக்கும் முன்விரோதம் இருந்து வருவதே முறையாக புலன் விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கையானது தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.